**அ.வ.எண்.26/2023**

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 26/2023 | வா.சா. | : 1 |
| பெயர் | : முத்து | த/பெ. | : அழகன் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : தேத்தாம்பட்டி |
| தேதி | : 26.03.2025 | வயது | : 57/2025 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 11.17 A.M. to 12.00 P. M.

**<u>1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) நான் தேத்தாம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆதார் அடையாள அட்டையை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்கில் சொல்லியுள்ள சொத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா 1977 ம் வருடம் இறந்துவிட்டார். என் அம்மா இறந்து 17 வருடம் ஆகிறது. எனக்கு சிலம்பாயி என்று ஒரு அக்கா உள்ளார் என்றால் இல்லை. சிலம்பாயி இறந்துவிட்டாரா என்றால், அவ்வாறு ஒரு நபர் பிறக்கவில்லை. நான் வழக்கிற்காக உடன் பிறந்த சகோதரியை இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. சிலம்பாயி என்பவருக்கு பிச்சன் என்ற கணவரும், அவர்களுக்கு மீனாட்சி, முத்துலெட்சுமி, பஞ்சு ஆகிய 3 பெண் பிள்ளைகளும் உள்ளார்கள் என்றால் சரியல்ல.

3) வழக்குச் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் பழைய எண்.650, புதிய எண்.870 ஆகும். வழக்குச் சொத்தை தவிர, வேறு பூர்வீக சொத்துக்கள் எனக்கு உள்ளது என்றால் இல்லை. வழக்குச் சொத்தை தவிர, வேறு பூர்வீக சொத்துக்கள் சர்வே எண்.645C, 693/6B ஆகிய சொத்துக்கள் இருந்தது

என்றால் பூர்வீக சொத்துக்கள் உள்ளது, அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. அந்த பூர்வீக சொத்துக்களை நான், 1ம் பிரதிவாதி அழகன், 2ம் பிரதிவாதி நல்லன் ஆகியோர் கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றால் சரியல்ல. வாய்க்கராலாக பாகப்பிரிவினை செய்து கொண்டு அதன்படி அனுபவம் செய்து வருகிறோம்.

4) பூர்வீக சொத்துக்களில் வந்த வருமானத்தில் தேத்தாம்பட்டி கிராமத்தில் சர்வே எண்.649/1U 1ம் பிரதிவாதி பெயரிலும், சர்வே எண்.649/1W, சர்வே எண்.686/1A, சர்வே எண்.651, சர்வே எண்.671/19 ஆகிய சொத்துக்களை 2ம் பிரதிவாதி நல்லான் பெயரிலும் கிரையம் பெற்றோம் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா இறந்த பிறகு வழக்குச் சொத்து மற்றும் பூர்வீக சொத்துக்களை ஊர் முன்னிலையில் வாய்க்கரலாக பிரித்துக் கொண்டோம் என்றால் சரிதான். என் அண்ணன் நல்லான் பெயரில் 48 செண்ட் இடத்தை கூட்டாக வாங்கி அதன் பிறகு பிரித்துக்கொண்டோம்.

5) சுமார் 20 வருடங்களுக்கு முன்பாக வாய்க்கரலாக பிரித்துக் கொண்டோம். அவ்வாறு பாகம் பிரித்த சொத்தில் வழக்குச் சொத்தும் உள்ளது என்றால் சரியல்ல. 20 வருடங்களுக்கு முன்பாக வாய்க்கரலாக பிரித்துக் கொண்டதில் இந்த வழக்குச் சொத்து 1ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண்.649/1U 1ம் பிரதிவாதி அழகன் என்பவருக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண்.686/1A சொத்தில் நான் ஒரு பாகமும், என் அண்ணன் நல்லான் மற்றும் அழகன் ஆகியோர் தலா ஒரு பாகமும் பிரித்துக் கொண்டோம் என்றால் சரியல்ல, என் அண்ணன் நல்லான் பிரித்துக் கொண்டார், நானும், அழகனும் அதனை சேர்ந்தாற்போல் அனுபவித்து வருகிறோம்.

6) சர்வே எண்.645/2C ல் உள்ள சொத்தை நாங்கள் 3 பேரும் ஆளுக்கொரு பாகமாக வாய்க்கரலாக பிரித்துக் கொண்டோம் என்றால் சரிதான். அவ்வாறு பிரிக்கப்பட்ட போது சர்வே எண்.870/19 ஆன இந்த வழக்குச் சொத்தை 1ம் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல, நானும், அழகனும் ஒன்றாக தான் அனுபவித்து வருகிறோம். சர்வே எண்.649/1W எனக்கு வீடுகட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட இடம் என்றால் சரியல்ல. நல்லானுக்கு சர்வே எண்.871/19 வீடுகட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட இடம் என்றால் சரியல்ல. நாங்கள் வாய்க்கரலாக தனித்தனியாக பிரித்துக் கொண்டு தனித்தனியாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான்.

7) சர்வே எண்.649/1W ல் நான் சென்ட்ரிங் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கதவு எண்.6/234 க்கு நான் என் பெயரில் வீட்டுவரி ரசீது கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல, அழகன் கட்டியிருப்பார். என் அண்ணன் நல்லான் சர்வே எண்.871/19 ல் சென்ட்ரிங் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அதில் அவர் வீட்டுவரி ரசீது செலுத்திவருகிறார் என்றால், அவரது இடத்திற்கு செலுத்திவருகிறார். சர்வே எண்.870/19 ல் அழகன் ஓட்டுவீடு கட்டி குடியிருந்து, அவர் பெயரில் ரசீது செலுத்தி வருகிறார் என்றால், முதலில் என் அம்மா பெயரில் ரசீது செலுத்தினோம், அவர் இறந்தபிறகு அழகன் பெயரில் ரசீது செலுத்தி வருகிறோம்.

8) என் சகோதரி சிலம்பாயி என்பவருக்கு சர்வே எண்.693/6B என்ற இடத்தை பிரித்துக் கொடுத்தோம் என்றால், அப்படியொரு சகோதரியே இல்லை. நாங்கள் விவசாய நிலங்களை தனித்தனியாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான், அதேபோல் தனித்தனியாக வீடுகட்டி வாழ்ந்து வருகிறோம் என்றால்

சரியல்ல. அதேபோல், சிலம்பாயி என்பவருக்கு ஒதுககப்பட்ட சொத்தை அவரது பெண் பிள்ளைகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்ட சொத்தில் அவரவர் உரிமையுள்ளது போக மற்றவர்களுக்கு மற்றவர்களின் சொத்தில் உரிமை எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

9) சர்வே எண்.651 இன்னும் பாகம் பிரிக்கவில்லை என்றால், நல்லான் மட்டும் தனியாக பிரித்து சென்றுவிட்டார். நானும், அழகனும் சேர்ந்து அனுபவித்து வருகிறோம். சர்வே எண்.651ஐ பிரித்துக் கொடுக்கச் சொல்லி நானும், அழகனும், நல்லான் பெயரில் நத்தம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால், நான் தான் புகார் கொடுத்தேன். ஆனால், இந்த வழக்குச் சொத்திலுள்ள வீட்டிற்கு தான் புகார் கொடுத்தேன். எங்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீகச் சொத்துக்களை பற்றியும், தனித்தனியாக பாகமாக பிரித்துக் கொண்ட சொத்துக்களை பற்றியும், பிரிக்கப்படாத சர்வே எண்.651 பற்றியும் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

10) நான் வழக்கில் முழுவிபரங்களை சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேலும் பிரிக்கப்படாத மற்ற சொத்துக்கள் குறித்து நான் இந்த வழக்கில் தெரிவிக்காததால் நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழககுச் சொத்தில் எனக்கு அனுபவமும், உரிமையுமில்லை என்றால் சரியல்ல. முழு உரிமையும் 1ம் பிரதிவாதிக்கு தான் உள்ளது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து 1ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் நான் எப்போதும் அனுபவித்ததில்லை என்றும், அதில் நான் குடியிருந்ததில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் சரியானதல்ல என்றால் சரியல்ல. நான்

வழக்குச் சொத்தை பராமரித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

11) எந்த தேதியில் வீட்டை மராமத்து செய்தேன், எந்த தேதியில் வீட்டை விட்டு காலிசெய்தேன் என்ற விபரம் வழகது ஆவணங்களில் சொல்லவில்லை என்றால் சரிதான். மார்கழி மாதம் காலி செய்தேன். நான் மீண்டும் வழக்குச் சொத்திற்கு என்றைக்கு வந்தேன் என்ற விபரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அது சம்பந்தமாக தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்ற விபரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து சம்பந்தமாக என்றைக்கு ஊரார் முன்னிலையில் பேசினோம் என்ற விபரம் வழக்கு ஆவணங்களில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் நான் குடியிருந்து வருவதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் ஏற்கனவே பாகம் பிரித்துக் கொண்டோம் என்றும், அவ்வாறு பாகம் பிரித்ததாக சொல்லிவிட்டு, வழக்குச் சொத்தில் பாகம் கேட்பது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 26.03.2025 கையெழுத்து செய்துள்ளார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.03.26 17:12:28 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.